**செய்தி வெளியீடு எண்:077** **நாள்: 08.02.2017**

## செய்தி வெளியீடு

## "21வது நூற்றாண்டுக்காண தொழில் முனைவோர்களுக்கு தேவைப்படும் திறமைகள்"

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்ச்சி சங்கம்) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு 2013–2014 ஆம் ஆண்டில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) அறிவித்தது. இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 2606 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். மேலும் பிரதமர் சுய வேலை வாய்ப்புத் திட்டம் (PMEGP) மற்றும் நகர்புர இளைஞர் சுய வேலை வாய்ப்புத்திட்டம் (UYEGP) ஆகியவற்றின் வாயிலாகவும் பல்லாயிரம் தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன.

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோருக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. தொழில் வளர்ச்சி மற்றும் தொழில் திறன் மேம்படவும் பிற அனுபவமிக்க தொழில் முனைவர்களின் ஆலோசனைகள் பெறுவதற்கும் தொழில் சார்ந்த வாடிக்கையாளர்கள், வங்கியாள்கள், தொழில் நுட்பவல்லுனர்களிடமும் ஆலோசனைகள் அவ்வப்போது பெறுவதற்கும் இவர்களுடன் நிண்டகால நல்லுறவை ஏற்படுத்தி கொள்வது அவசியமாகிறது.

இத்திட்டத்தின் கீழ் சிறந்த அனுபவம்மிக்க தொழில் முனைவோர்களுடன் தொடர்பு ஏற்படுத்தும் விதமாக மாதாந்திர தொழில் இணைப்பு (Networking), கூட்டம், ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளி கிழமை The Indus Entrepreneurs (TIE) அவர்களுடன் இணைந்து நடத்தப்படுகிறது. மே 2016 முதல் ஜனவரி 2017 வரை 7 கூட்டங்கள் நடை பெற்றதில் 278 தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

அடுத்த ஆலோசனை கூட்டம் வரும் பிப்ரவரி 10ம் தேதி தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 32ல் மாலை 4.00 மணியாளவில் **"21வது நூற்றாண்டுக்காண தொழில் முனைவோர்களுக்கு தேவைப்படும் திறமைகள்"** பற்றி கருத்துரையும் அதன் பின்னர் தொழில் முனைவோர் அறிமுகம்

செய்து கொள்ளும் இணைப்பு நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளதால் NEEDS / PMEGP / UYEGP மூலம் தொழில் துவங்கி மேலும், தொழிலை விரிவு படுத்த நினைக்கும் தொழில்முனைவோர்கள் வருகைதந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளாப்படுகிறார்கள். மேலும் தகவலுக்கு துணை இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மின்னஞ்சல்: ddp@editn.in தொலைபேசி எண்: **22252081 / 22252082, 9042912812** தொடர்பு கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம். இந்த பயிற்சி வகுப்பு தொழில் முனைவோர் நிறுவனத்தின் இணையதளத்தின் வாயிலாக (www.editn.in) இணைய – ஒலிபரப்பு (Webcast) செய்யப்படும். இணையும் மூலம் இக்கருத்துரையை கேட்டும் தொழில்முனைவோர்கள் இணையும் மூலம் கோள்விகள் கேட்கலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**